மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, திரு. வீராசாமியைப், பற்றிக் குறிப்பிட்ட நேரத்தில்** அதற்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அரிசி பேரத்திலே சம்பந்தப்பட்டதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா பொது மேடைகளிலே பேசி அது பத்திரிகையிலே வந்து 6 கோடிரூபாய் ஊழல் என்று வந்து, இப்படிப்பட்ட அவ தூறுகள் வருகிற நேரத்திலே இது சுதந்திரமா. இது அடக்கு முறை அல்லவா என்றெல்லாம் யாரையும், கேட்கக் கூடாது. அவரவர்கள் தாங்கள் நிரபராதி என்று நிரூபித்துக்கொள்ள நீதிமன்றத்தின் துணையை நாட வேண்டியிருக்கிறது. அதன்படி அரசின் சார்பிலே செல்வி ஜெயலலிதா மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. நீதிமன்றத்திலே அவர்கள் அதை விளக்க இருக்கிறார்கள். உண்மையிலேயே பேரம் நடந்ததா இல்லையா என்பதை நீதிமன்றம் சொல்ல இருக்கிறது. எனவே நீதி மன்றத்தில் ஒரு வழக்கு இருக்கும்போது. திரு. வீராசாமி** என்று சொன்ன அந்தச் சொற்களை அவைக் குறிப்பிலேயிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நன்றாகத் தெரியும். நீதிமன்றத்திலே இருக்கிற எந்த வழக்குத் தொடர்பாகவும் பொதுவாகவே பேசுவதே கூடாது. எனவே அமைச்சர் தொடர்பான அந்தக் குற்றச் சாட்டு அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. நான் மணியை அடிக்காமலேயே உங்களுக்கு உணர்த்திக்கொண்டிருக்கிறேன். நீங்களும் அதை மதித்து இருக்கிறீர்கள். முடித்தால் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. எஸ். ஆர். ராதா : தலைவர் அவர்களே, உங்களுக்கு நான் உதவியாக இருக்கிறேன். வழக்கில் சம்பந்தப் பட்டார் என்று மட்டும் சொல்கிறேன். குற்றச்சாட்டு பின்னால் நிரூபிக்கப்பட்டால் பேசிக் கொள்ளலாம்.

இங்கே மாண்புமிகு திரு. சீனிவாசன் ஒன்றைச் சொன்னார். இங்கே பல பேர் கட்சித் தலைவர்கள் இன்று வழக்கு மன்றத்திலே போய் வழக்கு போடுகிறார்கள் என்று. என்னிடத்திலே நான் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால் வேடிக்கையான ஒரு வழக்கு வந்தது. அந்த வழக்கு என்னவென்றால், சென்னையிலே கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சங்கம் என்று ஒரு சங்கம் இருக்கிறது. அந்தச் சங்கத்திலே ஒன்றிரண்டு எம். எல். ஏ. க்களின் மனைவிகளும் சேர்ந்து

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.